

<u>தமிழருவி மணியன் மனந்திறந்து பேசுகிறார்.</u>

மலேசிய மண்ணிற்குப் பலமுறை வந்த தமிழகத்தின் மிகச்சிறந்த பேச்சாளர்களில் ஒருவர் தமிழருவி மணியன். காமராஜர் இவர் பேச்சைத் தமிழருவி என்று வியந்து பாராட்டியதால் தமிழருவி மணியனானவர். பல்லாண்டுகள் மேனிலைப்பள்ளி ஆசிரியராகவும், சில ஆண்டுகள் வழக்கறிஞராகவும் பணியாற்றியவர். சென்ற தேர்தலில் தமிழக பாரதிய ஜனதா கூட்டணியில் பல கட்சிகள் ஒன்றிணையக் காரணமானவர். ஓராண்டிற்கு முன்னர் காந்திய மக்கள் கட்சி என்ற புதிய கட்சியைத் தோற்றுவித்தவர். ஆழ்ந்த அறிவாற்றல், கேட்டாரைப்பிணிக்கும் பேச்சாற்றல், வலிமையான எழுத்தாற்றல், தூய. வாழ்க்கை நெறி- இவற்றால் தமிழக வரலாற்றில் அழுத்தமான

முத்திரை பதிக்க உள்ளவர். திமுக ஆட்சியில் கலைஞரை ஈழப்பிரச்சினையில் கடுமையாக விமர்சித்ததின் விளைவாக அவர் வாடகைக்குக் குடியிருந்த வீட்டுவசதி வாரிய அடுக்கக இல்லத்திலிருந்து அவரை வெளியேற்ற வாரியம் உத்தரவிட்டது. அவர் நீதிமன்றத்திற்குச் சென்றார். நீதிபதி சந்துரு வாரியம் . பிறப்பித்த உத்தரவை ரத்துசெய்ததுடன் இவ்வாறு தீர்ப்பில் குறிப்பிட்டார்: *வீட்டு வசதி வாரிய தலைமை அலுவலக கட்டடத்தின் மேல் ''தமிழ் வாழ்க' என்கிற வார்த்தை பொறிக்கப்பட்டுள்ளது. இதை உண்மையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்றால், கொள்கை ரீதியான மாறுபாடுகள் இருந்தாலும் மனுதாரரைப் போன்ற தமிழ் எழுத்தாளர்கள், தமிழ் அறிஞர்கள், தமிழ் சிந்தனையாளர்களைக் கவுரவப்படுத்த வேண்டும்.தமிழ் சிந்தனையாளர்களைப் பாதுகாப்பதன் மூலமே தமிழ் வாழும். அப்போது தான், நியான் விளக்கு பொருத்தப்பட்ட போர்டில் உள்ள, 'தமிழ் வாழ்க' என்கிற வாசகம் மேலும் மிளிரும்.'* - இப்படி அதிரடி தீர்ப்பு வழங்கி நீதி மன்றம் மீட்டுக்கொடுத்த அதே வீட்டுவசதி வாரிய வாடகைக்குடியிருப்பில் தான் அவருடன் மயிலுக்கான நேர்காணல் நிகழ்ந்தது. அரசியல் பிரமுகருக்கான எந்தப் 'பந்தா'வும் இன்றி, பனியன் அணிந்த தோற்றத்துடன் அவரே வந்து கதவைத்திறந்து வரவேற்றார். இனிமையான, தெளிவான பேச்சும், கொண்ட கொள்கையில் மிளிரும் பற்றுறுதியும் வெளிப்பட்ட, மயிலுக்கான சிறப்பு நேர்காணல் இதோ:

**பள்ளியாசிரியர், வழக்கறிஞர் ஆகிய பணிகளிலிருந்து நீங்கள் அரசியலுக்கு வரக்காரணமான சூழல் யாது?**

முதல் தலைமுறையில் கல்வி கற்க வந்த மிக ஏழைமாணவர்கள் பயின்ற இந்து ஒற்றுமைக்கழக மேனிலைப்பள்ளியில் 20 ஆண்டுகள் பணிபுரிந்தேன். அதற்கு முன்பே சட்டப்படிப்பும் பயின்றேன். பள்ளியாசிரியராக ஏழை மாணவர்களுக்கு நல்லனவற்றைப் போதிக்கும் நல்ல பணியாக அது அமைந்தது. ஆனால். வழக்கறிஞர் தொழில் மனச்சான்றுக்கு ஏற்புடைய

தொழிலாக இல்லை. ஆன்மாவிற்கு அது நிறைவு தரவில்லை. முழு நேரமும் சமுதாயப்பணி செய்யவே விழைந்தேன். சமூகம், இலக்கியம், ஆன்மீகம் ஆகிய 3 தளங்களில் ஏறக்குறைய என் கல்லூரி பருவம்தொட்டு இன்று வரை என்னை ஈடுபடுத்திக்கொண்டுள்ளேன். இன்னும் சொல்லப்போனால் நான் அரசியலில் இருந்துகொண்டுதான் ஆசிரியராகவும், வழக்கறிஞராகவும் செயல்பட்டேன். இந்தியா முழுவதும் புகழ்க்கொடியை அன்றுமுதல் இன்று வரை உயர்த்திப்பிடித்த ஒரே தமிழன் காமராஜர்தான். அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக அவர் 2 முறை இருந்தார். அவர் 2வது முறை இருப்பதற்காக விதி திருத்தப்பட்டது. அவர் கண் அசைவுக்கு ஏற்ப காங்கிரஸ் நடந்தது. 2 பிரதமர்களை உருவாக்கும் மனிதராக விளங்கினார்.அந்த மனிதர் சொந்த மண்ணில் - அனைத்துப் பிள்ளைகளுக்கும் கல்விசென்று சேரவேண்டுமென்பதற்காகத் தவமியற்றியவர்- அவரால் கல்விகற்ற மாணவர் சமூதாயத்தின் ஒரு மாணவனால் அவர் தோற்றார். அப்போது மாணவனாக இருந்த என் நெஞ்சு பதறியது. மாநிலக்கல்லூரியில் பயின்றுகொண்டிருந்த நான், திருமலைப்பிள்ளை சாலையில் இருந்த அவர் வீட்டிற்கு மாணவர்களோடு சென்று சந்தித்து அவரோடு என்னை இணைத்துக்கொண்டேன். 1967இல் காமராஜரின் தோல்விக்குப்பின்னர் தான் என் அரசியல் வாழ்வு தொடங்கியது. தோற்றவர்களோடுதான் நான் காலம் முழுவதும் சென்றிருக்கிறேனே தவிர வென்றவர்களுக்கு வாழ்தொலி வழங்குவதற்கும் அவர்கள் வெற்றியைப் பயன்படுத்தி ஆதாயங்கள் அடைவதற்கும் ஒருநாளும் நான் அரசியல் வாழ்வைப் பயன்படுத்தியதில்லை.

**நீங்கள் மாணவராக இருந்த காலக்கட்டத்தில் எழுத்தாற்றல், பேச்சாற்றல் மிக்க இளைஞர்களெல்லாம் திராவிட இயக்கத்தால் ஈர்க்கப்பட்டபோது, நீங்கள் மட்டும் எப்படி வேறுபட்டுப்போனீர்கள் ?**

'ஆண்டி கையில் ஓடு இருக்கும், அதுவும் உனக்கில்லையே' என்று கண்ணதாசன், காமராஜர் பற்றி எழுதிய கவிதை வரிகள் எனக்குக் காமராஜர் மேல் ஈர்ப்பை ஏற்படுத்தின.ஒரு ஓடும் சொந்தமில்லாத ராஜரிஷியாக என்முன்னால் வாழ்ந்து காட்டிய காமராஜரை எனக்கு இனங்காட்டியவர் கண்ணதாசனே. தியாகம் செறிந்த வாழ்வியல் முறை என்னை கவர்ந்த்து. காந்தியத்தைக் கல்லுரி நாள்களில் படித்தேன். காந்தியத்தைப் பழுதறக்

கற்பதிலேயே என்காலம் இன்றுவரை கழிகிறது. காந்தியத்தின் மேல் பற்றுக்கொண்டவர்கள் திராவிட இயக்கத்தின் பக்கம் திரும்பிக்கூட பார்க்கமாட்டார்கள். காந்தியத்தின் வாரிசாக என் கண்முன்னால் வலம் வந்த ஒரே மனிதர் காமராஜர். பெரியாரைத்தவிர திராவிட இயக்கித்தில் உள்ள மற்றவர்கள் மேல் எனக்கு பெரிய மரியாதை இல்லை.இவர்கள் தமிழை வைத்து தங்களை வளர்த்துக்கொள்பவர்களே தவிர, தமிழை வளர்ப்பதற்காகத் தங்களை அர்ப்பணிப்பவர்கள் இல்லை என்ற புரிதல் மாணவப்பருவத்திலிருந்து இன்று வரை எனக்குண்டு. அண்ணா எளிமையானவர்; வாரிசு அரசியலை வளர்க்காதவர்; தனக்கென்று பொதுச்சொத்திலிருந்து ஒரு செப்புக்காசு கூட சேமிக்க நினைக்காதவர்; அவருடைய பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் வியப்பு தரக்கூடியவை. இத்தகைய சிறப்புகள் ஒருபக்கம் இருந்தாலும் தன்னுடைய பேச்சினாலும், எழுத்தினாலும் இளைய சமுதாயத்தை தவறான பாதைநோக்கி அழைத்துச்சென்றவர் என்று கருத்து எனக்கு உண்டு. கிடைக்காத திராவிட நாடு, கிடைக்கும் என்ற போலி நம்பிக்கை விதைத்தது, வடவர் எதிர்ப்பு, இந்தி திணிப்பு என்று கூறி இந்திய ஒருமைப்பாட்டிற்கு எதிரான உணர்வைத்தூண்டியது போன்ற செயல்கள் எனக்கு ஏற்புடையதாக இல்லை. இந்தியாவில் மொழிக்காகப் போராட்டம் நடத்திய ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டுமே. மாணவர்களின் பின்னாலிருந்து, இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர்கள் திமுகவினர். அண்ணாவுக்கும், கலைஞருக்கும் இதில் பெரும் பங்களிப்பு உண்டு. தமிழை வளர்ப்பதற்காகப் போராடியவர்கள் இவர்கள். ஆனால் இந்தியை அழிப்பதாகச் சொல்லிவிட்டு, ஆங்கிலத்தை வளர்த்து தமிழை அழித்தார்கள் இவர்கள் என்பதே உண்மை.. காங்கிரஸ் கதர் சட்டைக்காரர்கள் தமிழுக்கு எதிரானவர்கள், தமிழ் இனப்பற்றோ, மொழிப்பற்றோ இல்லாதவர்கள் என்பது தானே இவர்களின் குற்றச்சாட்டு. 1967 க்குப்பிறகு 48 ஆண்டுகள் திராவிடக்கட்சிகளின் ஆட்சிதானே நடந்துள்ளது. நீதித்துறை, நிர்வாகம், கல்வித்துறை முதலிய எவற்றிலும் இன்னும் தமிழ் வரவில்லையே. இதைச் செய்வதாகச் சொல்லித்தானே இயக்கம் நடத்தினார்கள். ஆனால் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் முதல் வகுப்பிலிருந்து பள்ளியிறுதி வகுப்புவரை தமிழ் வழிக்கல்விதான் நடந்தது.

ஆங்கிலம் ஒரு மொழிப்பாடமாக- அதுவும் 6 ஆம் வகுப்பில் தான் A,B,C,D தொடங்கியது. இதுபோல நர்சரிபள்ளிகள் காளான் குடைகளாகக் கடைவிரித்த காட்சி காங்கிரஸ் ஆட்சியில் கிடையவே கிடையாது. இதையெல்லாம் பார்க்கும்போது நான் மாணவப்பருவத்தில் கூறி வந்தது இன்று உண்மையாகவே காட்சியளிக்கிறது. திராவிடக்கட்சியினரைப்பற்றிய என் பார்வை சரியானதாகவே இருந்துள்ளது. எனக்கு வார்த்தை ஜாலங்களைவிட வாழ்க்கைமுறைதான் முக்கியம். ஆயிரம் வார்தைகளைவிட வலிமையானது ஒரு செயல் என்பார் விவேகானந்தர். வார்த்தைகளை அதிகம் விரயமாக்காமல் செயல்பட்ட அரசியல் தலைவர் காமராஜரே என்னை ஈர்த்தார். அவர் தம் சாதனைகளைக்கூட பெரிதாகப் பேசியதில்லை.

**அரசியலாளர், பேச்சாளர், எழுத்தாளர் ஆகிய 3 நிலைகளில் சிறந்து விளங்கும் நீங்கள், இவற்றில் மனநிறைவு தரும் ஒன்றைத் தேர்வு செய்வதாயின் எதனைக் குறிப்பிடுவீர்கள்?**

எழுத்தாளன்தான். பேச்சு மின்னல் போன்று அந்தக்கணத்தில் கண்ணைப்பறித்துக் காணாமல் போகும். ஆனால் எழுத்து என்பது காலத்தைவென்று நிற்கக்கூடிய கல்வெட்டாக இருக்கும். நான் எனைனை எழுத்தாளன் என்று அறிமுகப்படுத்துக்கொள்ளவே விரும்புகிறவன். எனக்குரிய கம்பீரமும், பெருமிதமும் எழுத்தாளன் என்பதில்தான்.

**விகடன் இதழில் *ஒற்றைச் சிறகு* என்ற ஒரே சிறுகதை எழுதியே இலக்கியச்சிந்தனை விருது பெற்றீர்கள். தொடர்ந்து எழுதாமால், படைப்பிலக்கியங்களுக்கு ஏன் முற்றுப்புள்ளி வைத்துவிட்டீர்கள்?**

பொய்யின் நிழல்படாத, புனைவுகளற்ற எழுத்து என்பது கட்டுரையில் மட்டும்தான் சாத்தியம். ஆகவே நான் கட்டுரை எழுதுபவனாகவே இருக்கிறேன். சிறுகதை நாவல் இவற்றைப் படிப்பதிலிருந்து விடுபட்டுப் பல காலம் ஆகிறது. கல்லூரி காலத்தில் உங்களுக்குப்பிடித்த கதை எழுத்தாளராக சாண்டில்யன் இருந்திருப்பார். 50 வயதிலும் அவரே எனக்குப்பிடித்த கதை எழுத்தாளர் என்று நீங்கள் கூறினால் நீங்கள் பரிணாம வளர்ச்சி பெறவில்லை என்றுதான் அர்த்தம். எனக்குத் தத்துவ தரிசனங்களில் மூழ்கித்திளைப்பதில் தான் விருப்பம். நான் உடல்நலமின்றி ஓய்வெடுத்தெடுத்த நேரத்தில்

ஆனந்தவிகடனை ஒவ்வொரு பக்கமாக படிக்க நேர்ந்தது. அதில் முத்திரைக்கதையாக இடம் பெற்ற ஒரு கதை, ஒரு குல்பி ஐஸ் விற்கும் பையன் ஒரு பெண்ணுடன் ஓடிப்போவதாக அமைந்திருந்தது. இக்கதையைப்படித்துக் கோபப்பட்டு விகடனிடம் பேசினேன். நீங்களே ஒரு நல்ல சிறுகதை எழுத்தாருங்கள் போடுகிறோம் என்றனர். எனவே முதல் முறையாக ஒற்றைச்சிறகு என்ற அந்த சிறுகதையை உடனே எழுதி அனுப்பினேன். நான் விரும்பி விரும்பி வாசித்த கவிஞர் கல்யாண்ஜி என்ற வாணிதாசன்- இலக்கியச்சிந்தனை தேர்வுக்குழுவிலிருந்தவர்- என் கதையைத் தேர்வுசெய்ததற்கு நான் மகிழ்ந்தேன். அதன்பிறகு கனவுப்பூக்கள், நிசப்த சங்கீதம் ஆகிய இருகதைகளை விகடனில் எழுதினேன். கடைசியாகப் பாவமன்னிப்பு என்ற கதை என் ரௌத்திரம் பத்திரிகையில் எழுதியதுதான். ஒரு நாவல், சிறுகதையைவிட மனதில் தைக்கிறாற்போன்ற விஷயங்களைக் கட்டுரையில் தான் எழுதமுடிகிறது.

**காந்திய சிந்தனையாளராகிய நீங்கள், உங்கள் இதழுக்கு ரௌத்திரம் என பெயர் வைத்தது முரண்பாடு இல்லையா?**

ஆறுவது சினம் என ஔவையார் சொன்னார். ஆனால் பாரதியோ ரௌத்திரம் பழகு என்கிறான். அப்படியென்றால் பாரதி, தான் பெரிதும் போற்றிய ஔவையாருடன் முரண்பட்டு பேசுகிறானா? ஔவையார் படைப்புகள் மட்டும் அழியாமலிருந்தால் அதுவே தமிழகத்திற்குப் போதும் என்று பதிவு செய்தவன் பாரதி. சுயநலம் சார்ந்து வருவது சினம். அது ஆறவேண்டும். சமூக நலனுக்காகப் பொங்கி எழுவது ரௌத்திரம்.அது பொங்கி வரவேண்டுமென்று விரும்பியவன் பாரதி. காந்திக்கு வந்தது ரௌத்திரம். அதுவும் தன்னை வருத்திக்கொண்டு தீமையை எதிர்ப்பது உயர்ந்த ரௌத்திரம்.

**காந்தியம் எந்த அளவுக்கு உங்கள் சொந்த வாழ்க்கையில் ஊடுருவியுள்ளது?**

என்னை மிகவும் கவர்ந்த காந்தியடிகளின் இரண்டு கருத்துகள்:- *1.வன்முறையாலும், பொய்யாலும் அரசியல் மாற்றம் நிகழ்ந்தால் அது நிலைக்காது. 2. உடமையற்றவன் உள்ளத்திலிருந்துதான் உண்மை அன்பு பிறக்கும்.* எனக்கு எந்த உடமையும் கிடையாது. அரசு வாடகை வீட்டில்

தான் வசிக்கிறேன்.. 20 ஆண்டுகள் ஆசிரியப்பணி செய்தமைக்கு எனக்கு வரும் ஓய்வூதியத்தொகை, ரூ18,000 ஐ வைத்தே வாழ்கிறேன். என் ஒரே மகனையும், மகளையும் திருமணம் செய்து கொடுத்து என் குடும்பக் கடமையை முடித்துவிட்டேன். அவர்களைக் காப்பாற்றவே 20 ஆண்டுகள் பணியிலிருந்து சம்பாதிக்கவேண்டியிருந்தது. அரசியல் என்பது என் தொழிலல்ல. அது வேள்வி. அரசியல் மூலம் ஒரு செப்புக்காசும் என் வீட்டிற்கு வரக்கூடாது. என் வீட்டு உலை அரசியலிலிருந்து வரும் பைசாவால் பொங்கக்கூடாது. நான் என் அறிவைக்கொண்டு பெறும் எதுவாயினும் அது பிறர் அறிவைப் பெருக்க மட்டுமே பயனாகவேண்டும். அரசு கல்லூரிகளில் பேச அழைத்தால் ரூ2000 மட்டுமே கேட்கிறேன். சுயநிதி கல்லூரிகளுக்குச் செல்லும்போது ரூ20,000 மதிப்பூதியம் பெறுகிறேன்.. ஒடுக்கப்பட்ட சமூகத்தைச்சேர்ந்த 12 பிள்ளைகளைத் தத்தெடுத்து வாழ்வு தருகிறேன். இந்தத் தொகை முழுவதும் அவர்கள் வாழ்வாதாரத்திற்கு நேரடியாகத் தரப்படுகிறது. அறக்கட்டளை எதனையும் நான் நிறுவவில்லை. நானே நடமாடும் அறக்கட்டளை. என் சொற்பொழிவுகளை 45,50 குறுந்தகடுகளாகப்போட்டு விற்று ஒருவர் ரூ5 இலட்சம் வரை சம்பாதித்து அதன்மூலம் வாழ்க்கை நடத்துவதாகக் கூறினார். நான் அவரைக் கட்டுப்படுத்தவில்லை. என் பேச்சு மக்களிடம் சென்று சேர்ந்தால் சரிதான். என் புத்தகங்களால் வரும் வருவாய் முழுவதும் காந்திய மக்கள் கட்சிக்குச் சென்றுவிடுகிறது.

**தமிழகத்தில் நீங்கள் அமைத்த பாரதிய ஜனதா கூட்டணி பற்றி, 'கருணாநிதி, ஜெயாவின் கன்னக்கோலை, மோடியின் சூலத்தால் இவர் தகர்க்கப்போகிறாராம் . இவரின் அரசியல் குருவான காமராஜருக்கே டெல்லியில் தீ வைத்த ஆர்.எஸ்.எஸ் சார்பு கூட்டத்தோடு எப்படி இவர் கூட்டணி வைக்கிறார்' என்று விமரச்சிக்கப்பட்டதற்கு உங்கள் விளக்கம் என்ன?**

எந்த இடத்திலும் நான் காமராஜர் வகுத்துத்தந்த பாதையிலிருந்து விலகி நடக்கவில்லை. நான் செய்தது தவறு என்றால் காமராஜர் 1971 இல் செய்ததும் தவறுதான். 1971 இல் காமராஜர் 'கிராண்ட் அலையன்ஸ்' என்ற கூட்டணியை உருவாக்கினார். இதில் ஸ்தாபன காங்கிரஸ், சுதந்திரா கட்சி,

ஜனசங்கம், சோஷலிஸ்டுகள் அனைவரும் இணைந்து இந்தியாவைக் காப்போம், ஜனநாயகத்தைக் காப்போம் என்ற முழக்கத்துடன், இந்திரா காந்தியை வீட்டுக்கு அனுப்புவதை நோக்கமாக வைத்துச் செயல்பட்டனர். தமிழ்நாட்டில் இரண்டு திராவிடக்கட்சிகளை வீட்டுக்கு அனுப்பவும், 10 ஆண்டுகள் மிக அசிங்கமான ஊழலாட்சி நடத்தி என் இனத்தை அழிப்பதற்கு ராஜபட்சேயின் முதுகிற்குப் பின்னாலிருந்து சகல வசதிகளையும் செய்துகொடுத்த காங்கிரசை வீட்டுக்கு அனுப்பவும் பாரதிய ஜனதா கூட்டணி அமைத்தேன். 25% வாக்குகளைப்பெற்ற திமுக வை வீட்டுக்கு அனுப்ப அந்த அளவுக்கோ அல்லது அதைவிடக் கூடுதலான வாக்குகளைப் பெறக்கூடிய இன்னொரு கட்சியைத்தான் நான் ஆதரிக்கவேண்டும். அதனால் 2011 இல் ஜெயலலிதாவை ஆதரித்தேன். இன்னும் திமுக தொடர்ந்திருந்தால் தமிழ்நாட்டில் எவரின் தனிநபர் சொத்தும் அவருடையதாக இருந்திருக்காது. அந்த அளவுக்கு நிலப்பறிப்பு இருந்தது. இதை அடக்கியாக வேண்டியிருந்தது. எந்த நேரத்தில் எது சாத்தியமோ, அதைச்செய்வதுதான் அரசியல். கனவுலகத்தில் வாழமுடியாது. சென்ற தேர்தலில் காங்கிரசை வீட்டுக்கு அனுப்ப பாரதிய ஜனதாவை விட்டால் வேறு வழியில்லை. வளர்ச்சி, ஊழலற்ற ஆட்சி என்ற முழக்கத்தை முன்வைத்த மோடி பிரதமராவது உறுதியானது. இந்தச் சூழலை நான் பயன்படுத்தினேன். இதனால் தமிழகத்தில் நான் அமைத்த கூட்டணிக்கு 19% வாக்குகள் கிடைத்தன.

**'முதல்வர் நாற்காலியில் அமரத் தகுதிமிக்கவராக வைகோதான் எனக்குத் தென்படுகிறார்' என்ற உங்கள் கருத்தில் மாற்றம் உண்டா?**

வைக்கோவின் எல்லாக் கொள்கைகளிலும் எனக்கு 100% உடன்பாடு கிடையாது. எனினும் நான் வைக்கோவை ஆதரிக்க காரணம் உண்டு. தமிழ்நாட்டு அரசியலில் திமுக வீழ்த்தப்படவேண்டும். அதிமுக அகற்றப்படவேண்டும். இதற்கு மாற்றாக முதலமைச்சர் நாற்காலியில் அமர வாய்ப்புள்ளவர்கள்- பாட்டாளி கட்சியின் மருத்துவர் ராமதாஸ் அல்லது அவர் மகன் அன்புமணி, மதிமுகவின் வைகோ, தேதிமுக வின் விஜயகாந்த்- இந்த மூன்று கட்சியினரில் என் தேர்வு வைக்கோவுக்கே. காரணம் அவர் நேர்மையானவர்; போர்க்குணம் மிக்கவர்; உலகத்தமிழர்களின் உரிமைகளைக் காக்கவேண்டுமென்ற துடிப்பு உள்ளவர். வைக்கோவைவிட இன்னும்

தூய்மையானவர், இன்னும் நேர்மையானவர் …என் கண்முன்னே தரிசனம் தந்தால் அவரைத்தான் ஆதரிப்பேன். ஒப்பீட்டளவில் தான் நான் இப்போது வைகோவை தேர்வுசெய்கிறேன். ராமதாஸ் முன்வைக்கும் திட்டங்கள் அற்புதமானவை. ஆனால் அவர் சாதி சார்ந்து சிந்திப்பவர் என்ற முத்திரை அவர்மேல் உள்ளது. தன்னுடைய இனமக்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து வாக்களித்தால் மிகப்பெரும் வெற்றியைப் பெறமுடியும் என்றுதான் அவரால் கூற முடிகிறது. விஜயகாந்தைப் பொறுத்தவரை அவர் திரையுலக கவர்ச்சிவழி வந்தவர். அந்தக்காலத்திலிருந்தே திரையுலகைச் சேர்ந்தவர்கள் முதல்வர் நாற்காலிக்கு வரவிரும்புவதை நான் விரும்பவில்லை. அவர்களுக்கு இருக்கும் ஆதரவை சமூக மாற்றத்திற்காகப் பயன்படுத்திக்கொள்ளலாமே தவிர அவர்களையே மீண்டும் மீண்டும் முதல்வர்களாக உட்காரவைப்பதில் பயனில்லை. ஏற்கனவே தமிழ்நாடு அனுபவித்தது ஆயிரம் தலைமுறைக்குப் போதுமானது.

**2016 தமிழக சட்டசபை தேர்தலில் உங்கள் காந்திய மக்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன ?**

2016 தேர்தலில் காந்திய மக்கள் கட்சி வேட்பாளர்களைக் களத்தில் நிறுத்தும். திமுக, அதிமுக, காங்கிரஸ், பாரதிய ஜனதா ஆகிய 4 கட்சிகள் அல்லாத ஓர் அணி அமைந்தால் அதில் அங்கம் வகிக்கும். அப்படி ஓர் அணியே அமையவில்லையென்றாலும் தனியே 2016 தேர்தலில் பங்குபெறும். பாரதிய ஜனதா கட்சியுடன் இனி வாழ்நாள் முழுவதும் எந்த ஒட்டுறவும் இல்லை. காரணம் இதுதான்: பாஜாகவின் அகில இந்தியத்தலைவர் ராஜ்நாத் சிங், தமிழக பொறுப்பு செயலாளர் முரளிதர ராவ், தமிழக பாஜக தலைவர் ஆகியோரிடம் சென்ற தேர்தல் கூட்டணிக்காகப் பேச்சுவார்த்தை நடத்தியபோது, “இந்தக்கூட்டணியில் அங்கம் வகிக்கும் வைகோ, ராமதாஸ், விஜயகாந்து ஆகியோரின் கட்சிகளின் பொது நோக்கம், தமிழ் ஈழம். நீங்கள் ஈழம் வாங்கிக்கொடுப்பீர்களென நம்பவில்லை. சர்வதேச நாடுகள் ஈழத்திற்கான வாக்கெடுப்பை நோக்கி நகர்கின்றபோது, நேற்றுவரை இருந்த மன்மோகன் சிங் முட்டுக்கட்டையாக இருந்தது போலன்றி, நீங்கள் மௌனமான ஆதரவு நிலைப்பாடுடன் இருந்தால் போதும். நாட்டில் பிரதமர் நாற்காலியில் அமரப்போகின்றவர் 120 கோடி மக்களின் நம்பிக்கைக்கு

உரியவராக இருக்கவேண்டும். இசுலாமியர்கள் 20 கோடிக்கு மேற்பட்டவர்களாக இருக்கிறார்கள். மேலும் கிறித்துவர்கள் உட்பட்ட சிறுபான்மையினர் ஏறத்தாழ நாட்டில் 20% இருக்கிறார்கள். காஷ்மீரத்துக்கு உள்ள சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்யவேண்டுமென்று சொல்கிறீர்கள். அனைத்துப்பிரிவினருக்குமான பொதுச்சட்டம் கொணர விரும்புகிறீர்கள். இவையெல்லாம் இப்போது வேண்டாம். அயோத்தியில் ராமர் கோயில் கட்டும் பிரச்சினையில் உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்குத் தலைவணக்குவோம் என்று சொல்லிவிடுங்கள்.- இவற்றையெல்லாம் செய்தால்தான் சிறுபான்மை மக்களின் நம்பிக்கையைப் பெறமுடியும்" என்றேன். நான் பேசியதற்கெல்லாம் மௌன சாட்சியாக இருந்து இணக்கம் தெரிவித்துவிட்டு, பின்னர் இவை எதனையும் இவர்கள் நிறைவேற்றவில்லை. பாஜகவுக்கு பெரும்பான்மை பலம் கிடைத்தது ஆபத்தாகிவிட்டது. இன்று தைரியமாக இந்த ஆட்சியில் இந்துத்துவ சக்திகள் செயல்படுகின்றன. கோட்சேக்கு இந்தியா முழுவதும் சிலைவைப்போம் என இதற்குமுன் யாராவது சொல்லியிருக்கிறார்களா? கிறித்துவ தேவாலயங்கள் தொடர்ந்து இடிக்கப்படுவதும், கன்னியாஸ்திரிகள் கற்பழிக்கப்படும் நிலைக்கு வந்திருப்பதும் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். இவர்கள் எவ்வளவு வேகமாக ஆட்சிக்கு வந்தார்களோ அவ்வளவு வேகமாக வீட்டுக்குப்போவதுதான் இந்தியாவுக்கு நல்லது என்று நான் நினைக்கிறேன்.எனவே இந்த 4 கட்சிகள் இல்லாத அணியில் நாங்கள் இருப்போம். கொண்ட கொள்கையில் உறுதியாக இருப்போம். 50 வாக்குகள் வாங்கினால்கூடப்போதும்.

**தேர்தலைத்தனியாக சந்திக்கின்ற அளவுக்கு உங்களுக்குப் பொருளாதார பலம் உள்ளதா?**

பொருளாதாரம் எங்களுக்குத் தேவையில்லை. பொருள்தான் வெற்றியைத் தேடித்தரும் என்று சொன்னால் காங்கிரஸ் இவ்வளவு மோசமான தோல்வியைத் தழுவியிருக்குமா? காங்கிரசுக்குப் பொருளாதாரப் பிரச்சினையே இல்லையே! தமிழகத்தில் இரண்டு திராவிடக் கட்சிகளும் மாறி மாறி ஆட்சிக்கு வருகின்றன. இவர்கள் இரண்டுபேருமே அசுரத்தனமான பணபலம் கொண்டவர்கள்தானே. ஏழையும்,பாழையும்,அனாதையும், ஆதரவற்றவர்களும் உருவாக்கிய கட்சிதானே திமுக. அது எப்படி 1967 இல்

பலமான காங்கிரசை வீழ்த்தியது? இந்தியா முழுவதும் பலமான பாஜக ஆட்சி- டில்லியில் மோடி பிரதமர்- அவர் அலைதான் இந்தியா முழுவதும் வீசிக்கொண்டிருந்தது. பொருளாதார பலத்துடன், பிரச்சாரத்தை முழக்கிக்கொண்டிருந்தது காங்கிரஸ்- இரண்டுக்கும் நடுவே கோலியாத் மாதிரி கேஜரிவால் பெரும் வெற்றிபெறவில்லையா? அந்த மாதிரி அதிசயம் தமிழ்நாட்டில் நடக்கக்கூடாதா? மக்கள் சக்தியை மீட்டெடுத்தால் இது சாத்தியமே!

**தமிழ்நாட்டின் கேஜரிவாலாக நீங்கள் விளங்குவீர்களா?**

இல்லை. நான் தமிழருவி மணியனாக இருக்கத்தான் விரும்புகிறேன். யாருடைய நகலாகவும் நான் இருக்க விரும்பவில்லை.

**மோடியின் இலங்கைப் பயணத்தால் ஈழத்தமிழர் பிரச்சினைகளுக்கும், தமிழக மீனவர்களின் பிரச்சினைகளுக்கும் ஆக்கப்பூர்வமான தீர்வு கிடைக்கும் என நம்புகிறீர்களா?**

அவர் பயணத்தால் தமிழர்களுக்கு ஒரு பயனும் இல்லை. அவர் போவதற்கு முன்பே இதைச் சொன்னேன். வர்த்தக ரீதியாக அவர் 4 உடன்படுக்கைகளில் கையெழுத்திட்டாரே தவிர, 13வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் பற்றியோ, தமிழக மீனவர் பிரச்சினை பற்றியோ எந்த ஒப்பந்தத்திலும் அவர் கையெழுத்திடவில்லை. இவை பற்றிப் பேசினார். கடைசிவரை பேச்சளவில் தான் இவை இருக்கும். இங்கு இவை பற்றி ஓர் ஆழமான புரிதல் யாருக்கும் இல்லை. ஈழத்திலிருந்து விக்னேஸ்வரன் வருகிறார்."தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் வாயைத்திறக்காமல் இருந்தாலே போதும். அதுவே எங்களுக்கு நல்லது. எங்கள் உரிமைகளை நாங்களே பெற்றுக்கொள்வோம். ஆனாலும் இந்தியாவின் உதவி தேவை" என்று பேசுகிறார். இந்தியாவின் உதவி எப்படி கிடைக்கும்? இந்தியா எப்போது உதவும்? இங்குள்ள தமிழர்கள் நிர்பந்தித்தால் தான் இந்தியா உதவும். முள்ளிவாய்க்கால் பிரச்சினையின்போது இங்குள்ள 7 கோடி தமிழர்களில் 1% பேர்கள் அதாவது 7 இலட்சம் தமிழர்கள் ஒன்றிணைந்து போராடியிருந்தாலேயே தீர்வு கிடைத்திருக்கும். ஆனால் இந்த ஒற்றுமை இல்லையே! நெடுமாறன் 100 பேருடன் போராடுகிறார். வைகோ 1000 பேருடன் அணிதிரள்கிறார் - இந்தபக்கம் திருமாவளவன்- அந்தப்

பக்கம் கிருஷ்ணசாமி- இன்னொரு பக்கம் சீமான்- எல்லாம் நூறு அல்லது இருநூறு பேர்களுடன் தனித்தனியே போராடுகிறார்கள். இவர்கள் ஒன்றாகச் சேர்ந்து குரல் கொடுத்தால்தான், தமிழ் இனம் ஒன்றுபட்டு நின்றால்தான் இதற்குத் தீர்வு கிடைக்கும். தமிழ் ஈழம் தமிழர்களால் கிடைக்காது. அது சிங்களர்களால் கிடைக்கும். எப்படி? அந்த நாட்டில் இரண்டு தேசிய இனங்கள் முரண்பட்டு நிற்கின்றன.. அங்குச் சமத்துவம் இல்லை. சமத்துவம் இல்லாத இடத்தில சகோதரத்துவம் இல்லை. இரண்டும் இல்லாத இடத்தில் சுதந்திரம் இல்லை. இந்தச் சூழலில் சர்வதேச நாடுகள் தலையிட்டு அங்கு நியாயத்தை நிலைநாட்ட வாக்கெடுப்பு நிகழ்த்தும். அப்பொழுது தமிழ் ஈழம் சாத்தியமாகும்.

**தமிழ்வழிக் கல்வியும், தமிழ்ப்பயன்பாடும் நலிந்து வரும் நிலையில் இதனைச் சீரமைக்க, உங்கள் கட்சியின் 18 அம்ச நெறிமுறைக் கோட்பாடுகளில் ஒரு திட்டமும் ஏன் இல்லை?**

எல்லாவற்றையும் ஓர் இயக்கம் ஒரு தாளில் ஒரு பக்கத்தில் சொல்லிவிடமுடியாது. "மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட தொழிற்கல்விக்கான தகுதி மதிப்பெண் கணக்கிடுதலில், தாய் மொழிப் பாடத்தில் பெற்ற மதிப்பெண்களை உள்ளடக்குதல்" என்று நெறிமுறைக்கோட்பாடுகளில் குறிப்பிட்டுள்ளோம். நான் வாரம் ஒருமுறையேனும் ஒரு கல்லூரிக்குப் பேசச்செல்கிறேன். அங்கு தமிழ்வழிக்கல்விதான் முக்கியம் என்பேன். தமிழைப் புறக்கணிக்காதீர்கள் என்பேன். நான் பேசிமுடிந்ததும் 100 மாணவர்களாவது என்னைச்சூழ்ந்துகொண்டு ' நீங்கள் சொல்வதெல்லாம் சரி. ஆனால் தமிழ் படித்தால் வேலை கிடைக்குமா?' என்று கேட்பார்கள். இன்று எல்லா மாணவர்களின் மனங்களிலும் இந்தக் கேள்விதான் இடம்பெறுகிறது. அவர்களுக்கு நான் சொல்வேன்: கல்வி என்பது 2 வகை. ஒன்று வயிற்றுக்கல்வி, இன்னொன்று வாழ்க்கைக்கல்வி. பணம் சார்ந்தது வயிற்றுக்கல்வி. பண்பாடு சார்ந்தது வாழ்க்கைக்கல்வி. வயிற்றுக்குச் சோறுபோட நீ எந்த மொழியை வேண்டுமானாலும் படி. மலேசியாவில் நிறைய தமிழ் மாணவர்கள் மலாய் படிக்கிறார்கள். மலாய் படிப்பது தமிழின் மேல் உள்ள வெறுப்பினால் அன்று; மலாய் மொழியின் மேல் உள்ள காதலாலும் அன்று. பணம் சார்ந்த கல்வியைக் கற்பதோடு

பண்பாட்டுக்கல்வியையும் படியுங்கள். பண்பாட்டை இழந்தால் வாழ்க்கை சிக்கலாகும். வாழ்க்கை சிக்கலின்றி ஒரு பறவையின் சிறகைப்போல எளிதாக இருக்கவேண்டுமாயின் அதற்குப் பண்பாடு முக்கியம். ஈராயிரம் ஆண்டுகளாக நம் மூதாதையர், சிறுமை முழுவதையும் கழித்துவிட்டுச் செதுக்கிக்கொடுத்த சிற்பம் தான் நம் தமிழ்ப்பண்பாடு. அதை அறிய நீ தமிழைப் படிக்கவேண்டும். அதற்காகவாவது தமிழ் படி. வீட்டில் கட்டாயம் தமிழ்ப்பேசு. நான் அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் பயணித்தபோது, வீடுகளில் தமிழ்மட்டும் பேசவேண்டுமென்ற நிலைப்பாட்டில், பயன்பாட்டுத்தமிழை இன்னும் காப்பாற்றி வருகின்ற எண்ணற்ற குடும்பங்களைக் கண்டேன்.இசுரேல் நாடு உருவானபோது பெரும்பாலான யூதர்களுக்கு ஆங்கிலம் மட்டுமே தெரியும். ஆனால் மொழியுணர்வாளர்கள் ஈப்ரூமொழியில்தான் படிக்கவேண்டுமென்ற நியாயத்தை எடுத்துரைத்தமையால், அம்மொழி கல்விமொழியாகி, இன்று அங்கு ஈப்ரு மொழிதான் கோலோச்சுகிறது. இன்று இலட்சக்கணக்கான கணினி நேர்த்தியாளர்களாக ஆங்கிலம் கற்ற தமிழர்கள் இருந்தும் அவர்களால் கண்டுபிடிப்புகள் எதனையும் நிகழ்த்தமுடிவதில்லை. தாய்மொழியில் படிப்பதால் தான் படைப்பாற்றல் வரும்; கற்பனையாற்றல் மிகும்; ஆளுமை பெருகும். உலகமெங்கும் மொழியியலாலர்களுடைய ஒற்றைக்கருத்து தாய்மொழியில் படிக்கவேண்டுமென்புதுதான். இதுவே எங்கள் கட்சியின் தெளிவான நிலைப்பாடாகும்.

**மலேசியத் தமிழர்களுக்கு, சிறப்பாக மயில் வாசகர்களுக்கு நீங்கள் விடுக்கும் செய்தி யாது ?**

மலேசியாவின் முக்கிய ஊர்களுக்கெல்லாம் பலமுறை வந்துள்ளேன். நிறைய மலேசியத் தமிழர்களுடன் பழகியுள்ளேன். உலகிலேயே தமிழ் விழாக்களைத் தொடர்ந்து நடத்துபவர்கள் மலேசியத் தமிழர்கள்தாம். எப்படித் தாயைப் பாராமரிப்பது உங்கள் வாழ்வின் முக்கியமான கடமையோ அதுபோல தாய்மொழியைப் பராமரிப்பதும் தலையாய கடமையாகும். ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழ்மொழி வாழ்ந்துகொண்டிருப்பதற்குக் காரணம் அது நம்மூதாதையர்களின் நாவில் நடுமிட்டுவருவதேயாகும். என் தந்தை என் தோள்மேல் இறக்கிவைத்த தாய்மொழியை என்பிள்ளைகளின் மேல் இறக்கி

வைப்பதுதான் எனக்கான சமூகக்கடமை. தாய்மொழியை முதலில் வீட்டு மொழியாகப் பயன்படுத்துங்கள். எல்லாமே வீட்டிலிருந்துதான் தொடங்குகிறது. தொன்மை இலக்கியங்களிலிருந்து நவீன இலக்கியங்கள் வரை தமிழர்கள் காதுகளில் போய் சேருவதை நோக்கமாகக்கொண்டு செயல்படுங்கள்.

(நேர்காணல்: இ.ஜே.சுந்தர், படங்கள்: ராஜேஷ்)

